**அனுப்புநர்** **பெறுநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 600 006.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 0208.41 / எச்1 / 2023** **நாள் : 26.12.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல்-2024 – தனித் தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centres) மூலம் ஆன்-லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

******

நடைபெறவிருக்கும் மார்ச்/ஏப்ரல் - 2024, இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு 27 .12.2023 (**புதன்கிழமை**) **அன்று காலை 11.00 மணி முதல் 10.01.2024 (புதன்கிழமை) அன்று மாலை 5.00 மணி வரையிலான நாட்களில்** ( 31 .12.2023 ( **ஞாயிற்றுக்கிழமை**), 01.01.2024 (**திங்கட்கிழமை**) **மற்றும்** 07.01.2024 ( **ஞாயிற்றுக்கிழமை**) **நீங்கலாக** ) கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களுக்கு (Service centres) நேரில் சென்று விண்ணப்பிக்கவேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 11.01.2024 (**வியாழக்கிழமை**) **அன்று காலை 11.00 மணி முதல் மற்றும்** 12.01.2024 (**வெள்ளிக்கிழமை**) ) **அன்று மாலை 5.00 மணி வரையிலான நாட்களில்** ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தனித்தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கு 27.12.2023 முதல் வருகை புரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோருக்கு கீழ்க்கண்டவாறு ஆன்-லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தி, பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க (Service Centres) அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 27.12.2023 முதல் தேர்வர்கள் சேவை மையங்களுக்கு வருகை புரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோரிடம் உரிய ஆவணங்களைப் பெற்று சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ கொண்டு ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்த பின்னர் திரையில் தோன்றும் SSLC PRIVATE APPLICATION / HSE PRIVATE APPLICATION என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றிருக்கும் சேவை மையங்கள் எவ்வாறு விண்ணப்பங்களைப் பெற வேண்டுமென்பதற்கான அறிவுரைகளை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

3. இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள், தேர்வுக்கால அட்டவணைகள் மற்றும் +1 / +2 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள் ஆகியவற்றை அதே இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.

4. அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றி, தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

5. தேர்வர்களின் விண்ணப்பங்ளை பெறுவதற்கு கடைசி நாளான 10.01.2024 மற்றும் 12.01.2024 ஆகிய நாட்களில் அனைத்து விண்ணப்பங்களையும் பெற்று பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர், Report Section – Multiple report -ஐ Click செய்துதேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் (Exam Fees & On-line Fees) தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.

பின்னர் அதனடிப்படையில் தனித் தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை (i) இடைநிலை பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான

தொகை ($10^{th}$ Exam Fees + Other Fees) (ii) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான தொகை (+1 Exam Fees + Other Fees), (iii) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான தொகை (+2 Exam Fees + Others Fees), அரசாணை(ப) எண்.780, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள்.28.12.2017-ன்படி, பெறப்பட்ட (iv) இடைநிலை பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை ($10^{th}$ On-line Fees) (v) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை (+1 On-line Fees) (vi) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை (+2 On-line Fees) என 6 வகைககளாக தனித்தனியாக பிரித்து, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டணத் தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினைகீழ்குறிப்பிட்டுள்ள நாட்களில் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| விவரம் | வகுப்பு | விண்ணப்பம் மற்றும் கட்டண இரசீது ஒப்படைக்கும் நாள் |
|---|---|---|
| விண்ணப்பங்கள் மற்றும் கட்டண இரசீது ( 27.12.2023 முதல் வரை 10.01.2024 பெறப்பட்ட விண்ணப்பங்கள்) | இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு | 12.01.2024 |
| சிறப்பு அனுமதி கட்டணம் (தத்கல்) (11.01.2024 மற்றும் 12.01.2024 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள்) | | 13.01.2024 |

மேலும், ஆன்-லைனில் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கான அறிவுரைகள் மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றியே தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும் பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்களையும் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கைபேசி எண்**: 9498383075 / 9498383081

**ஒம்/-**

**இயக்குநர்**

**இணைப்பு :**

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள் (இடைநிலை மற்றும் மேல்நிலை)
2. தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்
3. 10, +1 / +2 தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்
4. +1 / +2 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள்

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) – தகவலுக்காக
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் - தகவலுக்காகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும்

## <u>மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு</u>
## <u>சேவை மையங்களுக்கான அறிவுரைகள்</u>

மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு Service Centre–களில் தனித் தேர்வர்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் போது தகுதியான தனித் தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள்.

1. தனித்தேர்வர் விவரங்களை ஆன்–லைனில் பதிவு செய்த பின்னர் "Confirmation Copy" எனப்படும் விண்ணப்பமும் Registration Slip என்ற ஆவணமும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. ஆன்–லைனில் பதிவு செய்த "Confirmation Copy" எனக் குறிப்பிட்ட விண்ணப்பத்தோடு Registration Slip மற்றும் உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.
3. **<u>ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களின் மதிப்பெண் சான்றிதழின் நகலினை ஆய்வு செய்து தோல்வியுற்ற பாடத்திற்கு மட்டும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.</u>** மேலும், தேர்வருக்கு வழங்கப்படும் "Candidate Copy"–யில் கையொப்பம் பெறும் முன்னர் தேர்வரை விண்ணப்பித்த பாடம் / பாடங்களை சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தல் வேண்டும்.
4. "Confirmation Copy"–யின் மேல் வலதுப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.
5. விண்ணப்பத்தின் கீழ் தனித் தேர்வர் உரிய இடத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
6. S வகை தனித் தேர்வர்கள் மற்றும் SP வகை நேரடித் தனித் தேர்வர்கள் இணைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம், இவ்வலுவலக அறிவிக்கை மற்றும் "Confirmation Copy"–ல் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.
7. மார்ச் 2016 முதல் தேர்வெழுதி நிரந்தரப் பதிவெண் (**Permanent Register Number**) **கொண்டுள்ள தேர்வர்களுக்கு, விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களுக்கான நிரந்தரப் பதிவெண்ணை கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.**
8. அறிவியல் பாடத்தை பொருத்தவரை கருத்தியல் / செய்முறை என்ற இரு பகுதிகளில் எந்த பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வி அடைந்த பகுதிக்கு மட்டும் தேர்வெழுத விண்ணப்பிக்க வேண்டும் (கருத்தியல்

தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தப்பட்ச மதிப்பெண் 75–க்கு 20–ம், செய்முறைத் தேர்வில் 25–க்கு 15–ம் பெற வேண்டும்.)

9. அறிவியல் பாட கருத்தியல் மட்டும் (Theory) தேர்ச்சி பெற்றவர்கள். அறிவியல் பாட செய்முறைத் தேர்வுக்கு மாவட்டக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பித்த ஒப்புகைச்சீட்டுடன் சேவை மையத்தில் அறிவியல் பாடத்திற்கு Online–ல் பதிவு செய்ய வேண்டும்.

10. தேர்வுக் கட்டணத்தினை பணமாக செலுத்த தனித் தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித் தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slip–ல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித் தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தகுதியினை உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தகுதியில்லா நிகழ்வுகளில் உரிய காரணத்தைத் தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

11. Registration Slip–ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department Copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் Candidate Copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித் தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்ற பின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் Fees paid எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும். Candidate Copy யினை மட்டும் தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.

12. சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வர் பின்வரும் வகைகளுள் எவ்வகையைச் சார்ந்தவர் என்பதனைக் கேட்டு உறுதிசெய்த பின்னர் சரியான வாசகத்தை Click செய்து விண்ணப்பத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்.

   i. **SSLC – Direct Private**

   முதன்முறையாக மார்ச்/ஏப்ரல் 2024–ல் பத்தாம் வகுப்பு தேர்வெழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்ய இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

   ii. **SSLC – Private (With Permanent Register Number)**

   பழைய பாடத்திட்டத்தில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் நிரந்தரப் பதிவெண் கொண்டு பத்தாம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர், தற்போது தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை எழுதுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்களைப் பதிவு செய்தவற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

iii. SSLC – Private (Without Permanent Register Number)

பழைய பாடத்திட்டத்தில் நிரந்தர பதிவெண் இல்லாமல் பத்தாம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், தற்போது தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை எழுதுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்களைப் பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

13. <u>S வகையினர் (ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை</u>

- ஏற்கனவே எஸ்.எஸ்.எல்.சி தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற பாடங்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்

14. <u>SP வகையினர் (நேரடித் தனித் தேர்வர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை</u>

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி / ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான அசல் மாற்றுச் சான்றிதழ்.
- மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்கள் அன்னாரின் அனைத்து அசல் மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

15. <u>மாற்றுத் திறனாளிகள்</u>

**பார்வையற்றோர் /வாய்பேசாத மற்றும் காது கேளாதோருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒருமணி நேரம் போன்ற சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரத்தினை www.dge.tn.gov.in இணையதளம் மூலம் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

16. <u>தொழிற்பயிற்சி (ITI) பயின்ற மாணவர்கள்</u>

அரசாணை (நிலை) எண்.. 34, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (எஸ் 1) துறை, நாள்.30.03.2022–ன் படி, எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் பத்தாம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் வாயிலாக **27.12.2023 முதல் 10.01.2024 வரை மற்றும் "சிறப்பு அனுமதித் திட்டத்தில்" 11.01.2024 முதல் 12.01.2024 வரை** நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

I. SSLC EQUIVALENCE COURSE(ONLY FOR ITI CANDIDATES)
II. SSLC EQUIVALENCE COURSE(ONLY FOR ITI CANDIDATES) ARREAR

குறிப்பு

தொழிற்கல்வி பயின்ற/பயிலும் மாணவர்கள் பத்தாம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பிக்கும் போது **தொழிற்கல்வி படிப்பை (ITI) முடித்த மாணவர்கள் தொழிற்கல்வி முடித்ததற்கான சான்றிதழையும், தொழிற்கல்வி படிப்பை (ITI) தற்போது பயின்று கொண்டிருப்பவர்கள் அதற்கான படிப்பு சான்றிதழையும் (BONAFIDE CERTIFICATE) சமர்ப்பிக்க வேண்டும்.**

17. <u>தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம்:</u>

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.70/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.195/–** |

27. 12.2023 ( புதன் கிழமை) முதல் 10.01.2024 (புதன் கிழமை) வரை

பத்தாம் வகுப்புத் தேர்வினை எழுதும் தனித்தேர்வர்கள் ஒரு பாடத்திற்கு விண்ணப்பித்தாலும், 5 பாடங்களுக்கு விண்ணப்பித்தாலும் மேற்குறிப்பிட்டபடி ரூ.195/–ஐ தேர்வுக்கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

<u>சிறப்பு அனுமதி கட்டணம்:</u>

| | | |
|---|---|---|
| 3. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 4. | சிறப்பு அனுமதிக் கட்டணம் | ரூ.500/– |
| 5. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.70/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.695/–** |

11.01.2024 (வியாழக்கிழமை) முதல் 12.01.2024 (வெள்ளிக்கிழமை) வரை

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன் லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும்

18. <u>முக்கியக்குறிப்பு:–</u>

<u>*முதல் முறையாக நேரடி தனித்தேர்வராக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுத விரும்புவோர் , 2012–ஆம் ஆண்டுக்கு முன்னர் பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் தேர்ச்சி பெறாதோர் மற்றும் அறிவியல் பாட செய்முறைத்தேர்வு மட்டும் எழுதும்*</u> விண்ணப்பதாரர்கள் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புக்கு பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டினை சேவை மையங்களுக்கு கொண்டு சென்று அறிவியல் பாட தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நாள்:** 26.12.2023

**இடம்:** சென்னை – 600 006.

**மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2024**

**அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கான அறிவுரைகள்**

நடைபெறவுள்ள மார்ச் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களில் (Government Examinations Service Centres) தனித்தேர்வர்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் போது தகுதியான தனித்தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள் :-

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்**

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | கட்டணம் |
|---|---|---|
| மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE First Year - Direct Private) | ❖ பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று ஓராண்டு இடைவெளி இருத்தல் வேண்டும்.<br>❖ **பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச் சான்றிதழை (Equivalence Certificate) கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். இணைச்சான்றிதழ் சமர்ப்பிக்காத தேர்வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**<br>❖ 01.04.2024 அன்று 15 ½ வயது (15 வருடங்கள் 6 மாதங்கள்) நிறைவு செய்பவராக இருத்தல் வேண்டும். | தேர்வுக் கட்டணம் - 150/-<br>இதரக் கட்டணம் - 35/-<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் - 70/-<br><br>மொத்தக் கட்டணம் - ரூ.255/-<br><br>சிறப்பு அனுமதிக் (தத்கல்) கட்டணம் - ரூ.1000/- |

**<u>தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கெனவே எழுதி, தேர்ச்சி பெறாத தொழிற்கல்வி பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (Higher Secondary Second Year Vocational Arrear)</u>**

அரசுக் கடித (நிலை) எண்.215/அ.தே/2022, நாள். 07.12.2022-ன்படி, பழைய தொழிற்கல்வி பாடப்பிரிவில் உள்ள கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களில் தேர்வெழுதி தோல்வியுற்ற / வருகைபுரியாத தேர்வர்கள் ஜூன் 2024 வரை கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களிலேயே விண்ணப்பித்து தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் மேற்கண்ட பாடங்களில் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களுக்கு மாற்றாக வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற பாடத்தில் தேர்வெழுத வேண்டும்.

மேலும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள 7 தொழிற்கல்வி பாடப்பிரி பயின்று பொதுத் தேர்வில் தோல்வியுற்ற / வருகை புரியாத தேர்வர்கள் ஜூன் 2024 வரை 2021-2022 பாடதிட்டத்தின்படி தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி தேர்வெழுத வேண்டும்.

| | |
|---|---|
| 01 | **அடிப்படை இயந்திரவியல்** (Basic Mechanical Engineering) |
| 02 | **அடிப்படை மின்பொறியியல்**(Basic Electrical Engineering) |
| 03 | **அடிப்படை மின்னணு பொறியியல்** (Basic Electronics Engineering) |
| 04 | **நெசவியலும் ஆடை வடிவமைப்பும்** (Textiles and Dress Designing) |
| 05 | **செவிலியம்** (Nursing) |
| 06 | **வேளாண் அறிவியல்** (Agricultural Science) |
| 07 | **அலுவலக மேலாண்மையும் செயலியலும்** (Office Management and Secretaryship) |

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்</u>**

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | தேர்வுக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| ஏற்கெனவே மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR ARREAR) | ❖ மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே பழைய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தனித்தேர்வர்கள் அப்பாடங்களை மட்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR ARREAR OLD PATTERN)<br>❖ மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை புதிய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR ARREAR) | தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- இதரக் கட்டணம் ரூ.35/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br>(உ-ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 +70 = 155/-<br>இரு பாடங்கள் = 205<br>ரூ.100 + 35 + 70 = 205<br>**சிறப்பு அனுமதிக் (தத்கல்) கட்டணம் - ரூ.1000/-** |
| ஏற்கெனவே முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று / தேர்ச்சி பெறாமல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE SECOND YEAR) | ❖ ஏற்கனவே மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற / பெறாத / தேர்விற்கு வருகை புரியாத தேர்வர்கள் அனைவரும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br>(HSE SECOND YEAR) | <u>மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்ச்சி பெறாத பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள்</u><br>தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- இதரக் கட்டணம் ரூ.35/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br>(உ-ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 +70 = 155/-<br>இரு பாடங்கள் = 205<br>ரூ.100 + 35 + 70 = 205<br>**சிறப்பு அனுமதிக் (தத்கல்) கட்டணம் - ரூ.1000/-** |

| | | |
|---|---|---|
| | ❖ கடந்த ஆண்டு அல்லது அதற்கு முன்னர் முதன்முறையாக நேரடி தனித்தேர்வராக மேல்நிலை முதலாம் ஆண்டு மட்டும் பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிக்கும்பொழுது, அத்துடன் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.<br>(HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR) | <u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு முதன்முறையாக அனைத்து பாடங்களுக்கும் விண்ணப்பிக்கும் தேர்வர்கள்</u><br><br>தேர்வுக் கட்டணம் ரூ.150/-<br>இதரக் கட்டணம் ரூ.35/-<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br>மொத்தக் கட்டணம் ரூ.255/-<br>**சிறப்பு அனுமதிக் (தத்கல்) கட்டணம் - ரூ.1000/-** |

<u>தொழிற்பயிற்சி (ITI) பயின்ற மாணவர்கள்</u>

அரசாணை (நிலை) எண்.. 34, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (எஸ் 1) துறை, நாள்.30.03.2022-ன் படி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) -க்கான தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கும் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழின் சுயசான்றொப்பமிட்ட நகல் மற்றும் தொழிற்பயிற்சி நிறைவுச் சான்றிதழ் / சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட Bonafied Certificate இணைக்க வேண்டும்.

<u>பழைய பாடத்திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள்</u>

பழைய பாடத்திட்டத்தில் கலைப்பிரிவில் உள்ள கணினி அறிவியல் , வணிகக் கணிதம், இந்தியப் பண்பாடு மற்றும் தொழிற்கல்விப் பிரிவில் உள்ள பாடங்கள் ஆகியவை புதிய பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பாடங்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் உள்ள பாடங்களில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், **அப்பாடங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும். இப்பட்டியல் சேவை மையங்களின் விளம்பரப் பலகையில் கட்டாயமாக ஒட்டப்பட வேண்டும்.**

**மாற்றுத் திறனாளிகள்**

i. பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

ii. மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், **உரிய மருத்துவச் சான்றிதழ் நகல்களையும் கட்டாயமாக இணைத்து** சமர்ப்பிக்க வேண்டும்.

iii. மேலும், **மாற்றுத் திறனாளித் தேர்வர்களது விண்ணப்பத்தினை ஆன்-லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்பொழுது, அத்தேர்வர்கள் தேர்வெழுத கோரும் சலுகைகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

**சேவை மையங்களில் விண்ணப்பிக்க நேரில் வருகை புரியும் தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்:-**

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification பகுதியில் உள்ள மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகளைப் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டுதல் வேண்டும்.

2. சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வரது விண்ணப்பங்களை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. ஏற்கனவே மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள் மற்றும் முதன் முறையாக மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்கள், தாங்கள் ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின் நகலினை / மதிப்பெண் பட்டியலின் நகலினை / அல்லது தேர்வுக்கூட நுழைவுச் சீட்டின் நகலினை சுயசான்றொப்பமிட்டு (Self Attested) வழங்கினால் மட்டுமே அவர்களது விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்யவேண்டும்.

4. விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கு, www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

5. அதே பக்கத்தில், Private Candidate Application by Nodal Centres என்ற வாசகத்தினை click செய்து, சேவை மையத்திற்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி நுழைய வேண்டும்.

6. **சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வர் பின்வரும் வகைகளுள் எவ்வகையைச் சார்ந்தவர் என்பதனைக் கேட்டு உறுதிசெய்த பின்னர் சரியான வாசகத்தை click செய்து விண்ணப்பத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்.**

   i. HSE FIRST YEAR – DIRECT PRIVATE – (New Candidates) முதன்முறையாக மார்ச் 2024-ல் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்ய இந்த வாசகத்தினை click செய்ய வேண்டும்.

   ii. HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR – (Permanent Register Number starts with 19 …… 20…… 21 …. 22 & 23…) புதிய பாடத் திட்டத்தில் (மார்ச் 2019 முதல்) மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுதுவதற்கும், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்கள், **இரண்டாம் ஆண்டு தேர்வுகளை முதன்முறையாக எழுதுவதற்கும்** விண்ணப்பிப்பவர்களின் விவரங்களைப் பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

   iii. HSE FIRST YEAR ARREAR & SECOND YEAR ARREAR – (Permanent Register Number starts with 18 …..) மேல்நிலை முதலாம் ஆண்டு (மார்ச் / ஜூன் -2018) மற்றும் இரண்டாம் ஆண்டு (மார்ச் / ஜூன் -2019) பொதுத் தேர்வினை பழைய பாடத் திட்டத்தில் எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள், தற்போது மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுதுவதற்கு பதிவு செய்ய இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

   iv. HSE SECOND YEAR - OLD PATTERN - WITH PERMANENT REG NO – நிரந்தர பதிவெண் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை 1200 மதிப்பெண்களுக்கு எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை எழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

v. HSE SECOND YEAR - OLD PATTERN - WITHOUT PERMANENT REG NO – நிரந்தர பதிவெண் இல்லாமல், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை 1200 மதிப்பெண்களுக்கு எழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும். இவ்வகை தேர்வர்களது **பெயர் மற்றும் பிறந்த தேதியினை தட்டச்சு செய்யும்போது கூடுதல் கவனத்துடன் சரியாக தட்டச்சு செய்ய வேண்டும்.**

vi. HIGHER SECONDARY - I.T.I - WITH PERMANENT REGISTER NUMBER
நிரந்தர பதிவெண் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கு வருகை புரியாத / தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

vii. HIGHER SECONDARY - I.T.I - WITHOUT PERMANENT REGISTER NUMBER
தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் முதன் முறையாக (New Candidate) மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

முக்கிய குறிப்பு :

- **நிரந்தரப்பதிவெண் கொண்ட தேர்வர்களது நிரந்தரப் பதிவெண்ணை பதிவு செய்தபின்னர் திரையில் தோன்றும் தேர்வரது பெயர், பிறந்த தேதி மற்றும் பாடத்தொகுப்பு ஆகியவற்றை தேர்வர் உடன் எடுத்துவரும் மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிப்பார்த்த பின்னரே விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பத்தினைப் பதிவேற்றம் செய்வதற்கு முன்பு புகைப்படத்தை தேர்வருடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். (விண்ணப்பத்தில் புகைப்படம் இல்லாத விண்ணப்பதாரருக்கு புகைப்படத்தினை பதிவேற்றம் செய்யவேண்டும்)**

7. தனித்தேர்வர் விவரங்களை ஆன்-லைனில் பதிவு செய்த பின்னர், பதிவு செய்ததை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் (Confirmation Copy), Registration slip எனப்படும் படிவத்தினையும் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

8. விண்ணப்பத்தை ஆன்-லைனில் பதிவு செய்த பின் பதிவிறக்கம் செய்யும் விண்ணப்பத்தோடு (Application), Registration slip என்ற படிவத்தினையும், உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.

9. விண்ணப்பத்தின் மேல் இடப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.

10. விண்ணப்பத்தின் கீழ் தனித்தேர்வர் உரிய இடத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

11. நேரடித் தனித்தேர்வர்கள் இணைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம் விண்ணப்பத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை கண்டிப்பாக சரிபார்க்க வேண்டும். முதல்முறை விண்ணப்பிக்கும் நேரடித் தனித்தேர்வர்கள் அசல் ஆவணங்களை இணைக்க அறிவுறுத்தப்படுவதால், மிகவும் கவனமாக தனித்தேர்வர்கள் பூர்த்தி செய்த விவரத்துடன் இந்த ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்தபின் அவற்றை இணைத்துப் பெற வேண்டும்.

12. தேர்வுக் கட்டணத்தினைப் பணமாகச் செலுத்த தனித்தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slipல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, +1 / +2 தேர்வெழுத தேர்வர் தகுதியுள்ளவர் என்று உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வரின் தகுதி குறித்து சந்தேகம் எழும் நிகழ்வுகளில் உரிய காரணத்தை தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

13. Registration Slip ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் **candidate copy** எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித்தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்றபின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் **Fees paid** எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும் **candidate copy**யினை கிழித்து பள்ளி முத்திரையிட்டு தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.

14. பதிவேற்றம் செய்த தனித்தேர்வரது விவரத்தினை திருத்தம் செய்ய Candidate List Option-ஐ Click செய்ய வேண்டும்.

15. விண்ணப்ப நகலைப் பெறுவதற்கு கடைசி நாளான 10.01.2024 **மற்றும் 12.01.2024** ஆகிய நாட்களில் அனைத்து விண்ணப்பங்களையும் பெற்ற பின்னர் Report Section-ஐ Click செய்து, தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும்.

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) தேர்வுக்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :</u>**

| வ. எண் | <u>ஏற்கனவே +1 தேர்வெழுதி தேர்ச்சியடையாதோர்</u><br>(HSE First Year –Arrear Candidates) | வ. எண் | <u>முதன் முறையாக +1 தேர்வெழுதுவோர்</u><br>(HSE First Year – Direct Private) |
|---|---|---|---|
| 1. | Registration Slip | 1 | Registration Slip |
| 2. | அச்சிட்டு வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த (+1 மற்றும் +2) மதிப்பெண் பட்டியலின் (Statement of Marks) சுயசான்றொப்பமிட்ட நகல் (Self Attested Copy)<br>(அல்லது)<br>ஏற்கனவே +1 தேர்வெழுதியபொழுது, இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் / தேர்வுக் கூட நுழைவுச் சீட்டின் (Hall Ticket) நகல். | 2. | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்.<br>(அல்லது)<br>பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் **அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானது தான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 3. | --- | 3. | அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் (Original Transfer certificate) |
| 4. | --- | 4. | அசல் இடப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate)<br>(வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்வுக்கான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :**

| ஏற்கனவே +2 தேர்வெழுதி தேர்ச்சியடையாதோர் (HSE Second Year – Arrear Candidates) (1200/600 மதிப்பெண்கள்) | | ஏற்கனவே மார்ச் 2019 +1 தேர்வெழுதியபின் +2 தேர்வெழுதுவோர் (600 மதிப்பெண்கள்) (HSE Second Year – Direct Private) | |
|---|---|---|---|
| 1. | Registration Slip | 1. | Registration Slip |
| 2. | இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் (Mark Certificate) சுய சான்றொப்பமிட்ட நகல் (Self Attested copy) / அச்சிடப்பட்ட மதிப்பெண் பட்டியல்களின் (Statement of Marks) சுய சான்றொப்பமிட்ட நகல் (Self Attested copy) | 2. | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் அல்லது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். |
| 3. | தேர்வெழுத தேவையான வருகைப் பதிவு உள்ளது என்பது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக தேர்வெழுத பதிவு செய்து தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | 3. | --- |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | 4. | --- |

ஒம்/-

இயக்குநர்

நாள்: 26.12.2023


இடம்: சென்னை – 600 006.

## Procedure for paying online fees through Karuvoolam website by Service Centre


**Step:1**

**website: https://www.karuvoolam.tn.gov.in/**

**Step:2 - Click E- Challan Creation Payment**



## Step:3 - Enter the details in appropriate box - (OTP will sent entered mobile number )





## Select following details in the Departmental Details


**District : PAO (Chennai South)**

**Department Receiving Receipts : 04304 Directorate of Government Exams**

**DDO Name : 41010118 - Accounts Officer**




# SELECT BELOW OPTION FOR PAYMENT





## Select "payment Bank"

## The Screen will be appear


## Select payment type as your convenient



## The following Screen will be appeared for confirmation




## After Completion of successful Payment following screen will be appeared



## Paid E-Challan will be downloaded

# Government of Tamil Nadu

E-Challan

Payable at - PAO (CHENNAI SOUTH)

Remitter Copy

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Challan Number** | 20220308010803 | **Challan Date** | 08-Mar-2022 | **Payment Date** | 08-Mar-2022 |
| **Remitter Type** | Public | **Remitter Code** | 30 | **Remitter Name** | sc01254 |
| **Mobile No.** | 8838154196 | **Aadhaar No.** | | **Remitter Address** | No.49/24, B Block, 5th Street, Ezhil |
| **Department** | 04304-Directorate of Government Examination | **District** | PAO (Chennai South) | **DDO Code** | 41010118 |
| **DDO / Office Name** | ACCOUNTS OFFICER , CHENNAI | **Department Transaction ID** | | **Office Name** | |

| Receipt Type | Sub Type | Acct Code | Amount | Reference No. | Remark |
|---|---|---|---|---|---|
| Fees | [illegible] | [illegible]227 | 1 | sc1012 | |
| Fees | [illegible] Other Fees | [illegible]227 | 1 | sc1012 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Payment Mode** | Online | **Payment Type** | null | **Payment Status** | Success |
| **Challan Amount (Rs.)** | 2 | | | **Bank Name** | SBI |
| **Amount (in words)** | Two Rupees only. | | | **Bank ref no.** | CPABLZTHK7 |

---

**note: submit challan to District Assistant Director of Government Examination office along with supporting documents.**

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006
## மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு, தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித் தேர்வர்கள் (முதல் முறையாக நேரடி தனித் தேர்வராக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுத விரும்புவோர் மற்றும் ஓரிரு பாடங்களில் தேர்ச்சி பெறாதோர்) **27. 12.2023 ( புதன் கிழமை) முதல் 10. 01 .2024 (புதன் கிழமை) வரையிலான நாட்களில் காலை 11.00 மணி மாலை 5.00 மணி வரை (31.12.2023 –ஞாயிற்றுக்கிழமை, 01.01.2024– திங்கட்கிழமை மற்றும் 07.01.2024– ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக)** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று விண்ணப்பங்களை Online–ல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**சிறப்பு அனுமதித் திட்டம்:**

**மேற்காண் தேதிகளில்** விண்ணப்பிக்க தவறும் தேர்வர்கள், **"சிறப்பு அனுமதித்திட்டத்தில்" 11.01.2024 (வியாழக்கிழமை) முதல் 12.01.2024 (வெள்ளிக்கிழமை) வரை** ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். (கூடுதலாக சிறப்பு அனுமதி கட்டணம் – ரூ.500/–)

**பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள்:**

**பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் அனைவரும், மார்ச்/ஏப்ரல் 2024–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில், புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே தேர்வெழுத முடியும்.**

**முக்கிய குறிப்பு:–**

1. **நேரடி தனித் தேர்வர்கள், அனைவரும் பகுதி I (Part–I)–ல் மொழிப்பாடத்தில் தமிழ்மொழிப் பாடத்தை மட்டுமே முதல் மொழிப்பாடமாக தேர்வெழுதிட முடியும்.**

**விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்:**
**முதன் முறையாக விண்ணப்பிக்க விரும்பும் நேரடித் தனித்தேர்வர்கள்:**

1. 01.03.2024 அன்று 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. மத்திய / மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8 ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள மாணவ/மாணவியர்.
3. 9 ஆம் வகுப்பு வரை பயின்று இடையில் நின்ற மாணவ /மாணவியர்.
4. தேர்வுத் துறையால் நடத்தப்படும் 8 ம் வகுப்பு (ESLC) பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்கள்.

5. அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கல்வி காப்புறுதி திட்டத்தின் கீழ் பயின்று 8– ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக மாற்று சான்றிதழ் பெற்றவர்கள்.
6. உண்டு உறைவிடப் பள்ளியில் 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.
7. திறந்த வெளிப் பள்ளியில் **ஆங்கிலப்பாடத் தேர்ச்சியுடன் "C" level சான்றிதழ்** பெற்றவர்கள்.
8. 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தி செய்த உழைக்கும் சிறார் கல்வி திட்டத்தின் கீழ் தொழிலாளர் அமைச்சகம் இந்திய அரசின் கீழ் வழங்கப்பட்ட முறைசாரா கல்வி மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

மேற்படி வரிசை எண் 1 முதல் 8 முடியவுள்ள கல்வித்தகுதி பெற்ற தனித்தேர்வர்கள் அறிவியல் செய்முறைப் பயிற்சிக்கு பதிவு / பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.

<u>ஏற்கெனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள்:</u>

1. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் நடத்தப்பட்ட திறந்தவெளிப் பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களில் 01.03.2024 அன்று 14 $\frac{1}{2}$ வயது பூர்த்தியடைந்தவர்கள் திறந்தவெளி பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மட்டும், தனித்தேர்வர்களாக அரசுத் தேர்வுத்துறையால் நடத்தப்படும் மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். அறிவியல் பாடத்திற்கு வ.எண் 5–ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை கடைபிடிக்க வேண்டும்.
2. எஸ்.எஸ்.எல்.சி பழைய பாடத்திட்டத்தில் தோல்வியுற்றிருப்பின், தோல்வியுற்ற பாடங்களை மட்டும் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். அறிவியல் பாடத்திற்கு வ.எண் 5–ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை கடைபிடிக்க வேண்டும்.
3. (i) ஓ.எஸ்.எல்.சி பழைய பாடத்திட்டத்தில் அறிவியல் பாடத்தைத் தவிர ஏனைய பாடங்களில் தோல்வியுற்றிருப்பின், தோல்வியுற்ற பாடங்களை மட்டும் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். அறிவியல் பாடத்திற்கு வ.எண் 5–ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை கடைபிடிக்க வேண்டும்.

   (ii) முதன்மை மொழிப் பாடத்தில் (Main Language) தமிழ் மொழி தவிர பிற மொழிப்பாடங்களில் தோல்வியுற்றிருப்பினும், அத்தேர்வர்களும் தமிழ்மொழிப் பாடத்தை மட்டுமே பகுதி I ல் தேர்வெழுதிட அனுமதிக்கப்படுவர்.

4. (i) மெட்ரிக் / ஆங்கிலோ இந்திய பழைய பாடத்திட்டத்தில் ஓரிரு பாடங்களில்கூட தோல்வியுற்றிருப்பினும், மேற்படி தேர்வர்கள் பத்தாம் வகுப்பு புதிய பாடத்திட்டத்தில் ஒரே நேரத்தில் அனைத்துப் பாடங்களுக்கும் விண்ணப்பித்து (அறிவியல் செய்முறை மற்றும் கருத்தியல் உட்பட), அனைத்து பாடங்களையும் தேர்வெழுத வேண்டும். பகுதி I–ல் தமிழ் மொழிப்பாடத்தினை மட்டுமே தேர்வெழுத முடியும்.

   (ii) தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட தனித்தேர்வர்கள், அவர்கள் விருப்பப்படின் அவரவர் தாய்மொழியை பகுதி IV–ல் விருப்பப்பாடமாக எடுத்து ஒருதாள் கொண்ட தேர்வாக தேர்வெழுதலாம்.

   (iii) தேர்வரின் கைவசம் உள்ள மெட்ரிக் / ஆங்கிலோ இந்திய அசல் மதிப்பெண் சான்றிதழை அரசுத் தேர்வு சேவை மையத்தில் சமர்ப்பித்துவிட்டு தற்போதுள்ள பாடத்திட்டத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்க வேண்டும்.

5. **அறிவியல் பாடத்தை ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள் செய்முறைத் (Practical) / கருத்தியல் (Theory) என்ற இரு பகுதிகளில் எந்தப் பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வியுற்ற பகுதிக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.**

6. **அனைத்து பாட கருத்தியலில் (Theory) தேர்ச்சி பெற்று, அறிவியல் செய்முறையில் தேர்ச்சிப் பெறாதவர்கள் அறிவியல் பாட செய்முறைத் தேர்வுக்கு மாவட்டக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பித்த ஒப்புகைச்சீட்டுடன் 27.12.2023 முதல் 10.01.2024 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Govt Examnation Service Centre) நேரில் சென்று அறிவியல்பாட தேர்விற்கு பதிவு செய்து கொள்ள வேண்டும்.**

<u>வெளிமாநில மற்றும் வெளிநாடு வாழ் தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முறை:</u>

இவ்வலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சேவை மையங்களில் (Service Centres) நேரடியாக சென்று விண்ணப்பிக்க இயலாத வெளி மாநில மற்றும் வெளிநாடு வாழ் தனித்தேர்வர்கள், மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், இத்துறையின் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படத்துடன் தேர்வரின் குடும்ப

உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் மூலம் சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களை, மேற்குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் நேரில் அணுகி விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

<u>**வெளிமாநில / வெளிநாட்டில் பயின்றவர்கள் விண்ணப்பிக்கும் முறை:**</u>

வெளிமாநிலம் மற்றும் வெளி நாட்டில் பயின்று தமிழ்நாட்டில் மார்ச்/ஏப்ரல் 2024 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத விரும்பும் தனித்தேர்வர்கள் இடம்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate) மற்றும் இணை சான்றிதழ் (Equivalency Certificate) பெற்று அரசுத் தேர்வு சேவை மையங்களில் (Government Examinations Service Centres) சமர்ப்பித்தப்பின் விண்ணப்பிக்கலாம்.

<u>**விண்ணப்பங்களை ஆன்– லைனில் பதிவுச் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்கள் (Government Examinations Service Centres):**</u>

தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன் லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களுக்கு (Service Centres) நேரில் சென்று தங்களது விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களின் விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

<u>**விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள்:**</u>

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்படுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களில் (Government Examinations Service Centres) 27.12.2023 ( புதன் கிழமை) முதல் 10.01.2024 (புதன் கிழமை) வரையிலான நாட்களில் (31.12.2023 –ஞாயிற்றுக்கிழமை, 01.01.2024– திங்கட்கிழமை மற்றும் 07.01.2024– ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) தங்களின் விண்ணப்பத்தினை ஆன்–லைன் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் பதிவு செய்ய தவறும் தேர்வர்கள் 11.01.2024 (வியாழக்கிழமை) முதல் 12.01.2024 (வெள்ளிக்கிழமை) வரை சிறப்பு அனுமதி திட்டத்தின்கீழ் (Takkal) பதிவு செய்து கொள்ளலாம்.**

**தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணம்:**

| | |
|---|---|
| தேர்வுக் கட்டணம் | ரூ. 125/– |
| ஆன்லைன் பதிவு கட்டணம் | ரூ. 70/– |
| **மொத்தம்** | ரூ. 195/– |

பத்தாம் வகுப்புத் தேர்வினை எழுதும் தனித்தேர்வர்கள் **ஒரு** பாடத்திற்கு விண்ணப்பித்தாலும், 5 பாடங்களுக்கு விண்ணப்பித்தாலும் மேற்குறிப்பிட்டபடி ரூ.195/–ஐ தேர்வுக்கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன் லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும்.

**மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கான அறிவுரை:**

1. பார்வையற்றோர் / வாய்பேசாத மற்றும் காதுகேளாதோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணைகளை www.dge.tn.gov.in என்ற அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் காணலாம்.

3. அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், **உரிய மருத்துவச் சான்றிதழ்களை கட்டாயமாக இணைத்து** சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம் :**

ஆன் லைனில் விண்ணப்பத்தினைப் பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச்சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுகள் இயக்ககம் பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால் ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்:**

1. **முதன் முறையாக விண்ணப்பிக்கும் நேரடித் தனித்தேர்வர்கள் (Direct Private Candidate)**

   I. எட்டாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான அசல் மாற்றுச் சான்றிதழ்

   II. எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு அசல் மதிப்பெண் சான்றிதழ்

   III. அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.

2. **மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய பாடத்திட்டத்தில் பயின்று தோல்வியுற்ற தேர்வர்கள்**

   I. மெட்ரிக்/ஆங்கிலோ இந்திய அசல் மதிப்பெண் சான்றிதழ்

   II. அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.

3. **வெளிமாநிலங்களில் / CBSE–ல் பயின்ற தேர்வர்கள்**

   I. உரிய கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் கூடிய (endorsed certificate) மாற்றுச் சான்றிதழ் அல்லது மதிப்பெண் சான்றிதழ் அசல்.

   II. அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு,

**ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள்**

i ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற அனைத்துப் பருவங்களின் **சுயசான்றொப்பமிட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல்**

ii அறிவியல் செய்முறைப் பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான பயிற்சி பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சி சான்றிதழ் அசல் அல்லது செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர் பதிவு செய்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டு.

**சிறப்பு அனுமதி கட்டணம்:**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | சிறப்பு அனுமதிக் கட்டணம் | ரூ.500/– |
| 3. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.70/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.695/–** |

தேர்வுக்கட்டணம், சிறப்பு அனுமதிக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவு கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும்.

**தொழிற்பயிற்சி (ITI) பயின்ற மாணவர்கள்:**

அரசாணை (நிலை) எண்.34 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (எஸ் 1) துறை, நாள்:30.03.2022–ன் படி. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் பத்தாம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத்தேர்வுகளுக்கும், அரசுத் தேர்வுகள் இயக்கக சேவைமையங்களின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும், தகுதியற்றவர்களுக்கு தேர்வு அனுமதி இரத்து செய்யப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், இத்தேர்வுகள் சார்ந்த விரிவான தகவல்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

**ஒம்/**
**இயக்குநர்**

**இடம்: சென்னை – 6**
**நாள்: 26. 12.2023**

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத்தேர்வு, மார்ச் - 2024**

**தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்**

2024 மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Govt.Examination Service Centres) 27 .12 .2023 **( புதன் கிழமை) காலை 11.00 மணி முதல்** 10 .01 .2024 **( புதன் கிழமை) மாலை 05.00 மணி வரை** (31.12.2023 **(ஞாயிற்றுக் கிழமை)**, 01.01.2024 ( **திங்கட் கிழமை**) **மற்றும்** 07.01.2024 **(ஞாயிற்றுக் கிழமை) நீங்கலாக**) உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**சிறப்பு அனுமதித் திட்டம்**

27 .12 . 2023 முதல் 10 .01 .2024 வரையிலான தேதிகளில் மார்ச் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், **சிறப்பு அனுமதித் திட்டத்தில்** (Tatkal) 11.01.2024 ( **வியாழக் கிழமை**) **மற்றும்** 12.01. 2024 (**வெள்ளிக் கிழமை**) **ஆகிய நாட்களில் காலை 11.00 மணி முதல் 05.00 மணி வரை** உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**தேர்வுக் கால அட்டவணை**

மார்ச் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு நடைபெறும் நாட்கள் குறித்த தேர்வு கால அட்டவணையினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம்.

**பழைய பாடத்திட்டதில் (Old Syllabus) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர்**

ஏற்கனவே மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத்தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) எழுதி தேர்ச்சி பெறாதவர்கள், மார்ச் 2024-ல் நடைபெறும் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வுகளை புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

**பழைய பாடத்திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள்**

பழைய பாடத்திட்டத்தில் கலைப்பிரிவில் உள்ள கணினி அறிவியல் , வணிகக் கணிதம், இந்தியப் பண்பாடு மற்றும் தொழிற்கல்விப் பிரிவில் உள்ள பாடங்கள் ஆகியவை புதிய பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பாடங்களின் விவரங்களடங்கிய பட்டியலை www.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். அப்பட்டியலில் உள்ள பாடங்களில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், **அப்பாடங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும்.**

**விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்**

| **தனித்தேர்வர் வகை** | **விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர்** | **செலுத்த வேண்டிய கட்டணம்** |
|---|---|---|
| மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE First Year - Direct Private) | ❖ பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று ஓராண்டு இடைவெளி இருத்தல் வேண்டும். **பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக பெற்ற இணைச் சான்றிதழை** (Equivalence Certificate) **கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். இணைச் சான்றிதழ் சமர்ப்பிக்காத தேர்வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**<br>❖ 01.04.2024 அன்று 15 ½ வயது (15 வருடங்கள் 6 மாதங்கள்) நிறைவு செய்பவராக இருத்தல் வேண்டும்.<br>❖ பக்கம் 5-ல் குறிப்பிட்டுள்ள ஐந்து பாடத் தொகுப்புகளில் ஏதேனுமொன்றில் குறிப்பிடப் பட்டுள்ள நான்கு பாடங்களுடன் (செய்முறை அல்லாத பாடங்கள்) மொழிப்பாடங்களையும் சேர்த்து மொத்தம் ஆறு பாடங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.<br>❖ மனுதாரர் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை வேறு மாநிலத்தில் ஏற்கனவே எழுதியிருக்கக் கூடாது. | தேர்வுக் கட்டணம் - 150/-<br>இதரக் கட்டணம் - 35/-<br>இணைய தள பதிவுக் கட்டணம் - 70/-<br>மொத்தக் கட்டணம் - ரூ.255/-<br><br>சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.1000/- |

| | | |
|---|---|---|
| மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே எழுதி, தேர்ச்சி பெறாத பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (HSE First Year - Arrear) | ❖ மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள் தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். | தேர்வுக் கட்டணம் (ஒவ்வொரு பாடத்திற்கும்) – ரூ. 50/-<br>இதரக் கட்டணம் - ரூ.35/-<br>ஆன்-லைன் மற்றும் பதிவுக் கட்டணம் - ரூ.70/-<br><br>சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.1000/- |

<u>தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கெனவே எழுதி, தேர்ச்சி பெறாத தொழிற்கல்வி பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (Higher Secondary First Year Vocational Arrear)</u>

அரசாணை (நிலை) எண்.125, பள்ளிக்கல்வி (ப.க.7(1))த் துறை, நாள்:15.07.2022-ல் மேல்நிலைக் கல்வியில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை சீரமைக்கப்பட்டதன் அடிப்படையில், 2022-2023-ம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் இணைப்பில் கண்டுள்ள 8 தொழிற்கல்வி பாடப்பிரிவின் பாடநூல்கள் தமிழ் மற்றும் ஆங்கில வழிகளில் மறுசீரமைக்கப்பட்டும், தொழிற்கல்வி பாடப்பிரிவில் இடம் பெற்றுள்ள கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களுக்கு மாற்றாக வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**அரசுக் கடித (நிலை) எண்.215/அ.தே/2022, நாள்.07.12.2022-ன்படி, பழைய தொழிற்கல்வி பாடப்பிரிவில் உள்ள கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களில் தேர்வெழுதி தோல்வியுற்ற / வருகைபுரியாத தேர்வர்கள் ஜூன் 2024 வரை கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களிலேயே விண்ணப்பித்து தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் மேற்கண்ட பாடங்களில் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களுக்கு மாற்றாக வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற பாடத்தில் தேர்வெழுத வேண்டும்.**

மேலும், கீழ்க்குறிப்பிட்டுள்ள 8 தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயின்று பொதுத் தேர்வில் தோல்வியுற்ற / வருகை புரியாத தேர்வர்கள் ஜுன் 2024 வரை பழைய பாடதிட்டத்தின்படி தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி தேர்வெழுத வேண்டும்.

இந்நடைமுறை நேரடித் தனித் தேர்வர்களுக்கு பொருந்தாது.

| | |
|---|---|
| 01 | அடிப்படை இயந்திரவியல் ( Basic Mechanical Engineering) |
| 02 | அடிப்படை மின்பொறியியல் ( Basic Electrical Engineering) |
| 03 | அடிப்படை மின்னனு பொறியியல் ( Basic Electronics Engineering) |
| 04 | நெசவியலும் ஆடை வடிவமைப்பும் (Textiles and Dress Designing) |
| 05 | செவிலியம் (Nursing) |
| 06 | வேளாண் அறிவியல் (Agricultural Science) |
| 07 | அலுவலக மேலாண்மையும் செயலியலும் (Office Management and Secretaryship) |
| 08 | கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும் ( Accountancy and Auditing) |

**விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Govt Examinations Service Centres)**

தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Govt Examinations Service Centres) உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று தங்களுடைய விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**<u>விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம்</u>** :

ஆன்-லைனில் விண்ணப்பத்தினைப் பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச்சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக் கூட நுழைவுச்சீட்டுகளை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியம்.

**<u>தேர்வு மையம்</u>** :

தனித்தேர்வர்கள், அவரவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வெழுத வேண்டும்.

**<u>முக்கிய அறிவுரைகள்</u>** :

**I. <u>தேர்வெழுத தேர்வு செய்யப்பட வேண்டிய பாடத்தொகுதிகள் (புதிய பாடத்திட்டம்)</u>**

முதன் முதலாக மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதும் "HP"வகை நேரடித் தனித்தேர்வர்கள், புதிய பாடத்திட்டத்தில் பகுதி I மற்றும் II மொழிப்பாடங்களுடன் பின்வரும் ஐந்து பாடத் தொகுப்புகளில் ஏதேனுமொன்றில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். **ஒரு முறை தேர்வு செய்த பாடத் தொகுதியினை, எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்றம் செய்ய இயலாது.**

| பாடத் தொகுப்பு எண் | பகுதி - III பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 2704 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2705 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2706 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | அறவியல் மற்றும் இந்தியக் கலாச்சாரம் |
| 2707 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 2708 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் |

**<u>II. தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை</u>** :

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் பணமாக செலுத்த வேண்டும். **பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

**III. <u>தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையத்தில் (Govt.Examination Service Centre) தேர்வுக் கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>**

| | <u>ஏற்கனவே +1 தேர்வெழுதி தோல்வியுற்றோர்</u> | | <u>முதன் முறையாக +1தேர்வெழுதுவோர்</u> |
|---|---|---|---|
| 1. | அச்சிட்டு வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த (+1 மற்றும் +2) மதிப்பெண் பட்டியலின் (Statement of Marks) சுயசான்றொப்பமிட்ட நகல் (Self Attested Copy)<br>(அல்லது)<br>ஏற்கனவே +1 தேர்வெழுதிய பொழுது இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் (Photo copy) / தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். | 1. | பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்.<br>(அல்லது)<br>பத்தாம் வகுப்பிற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அசல் சான்றிதழ் மற்றும் **அச்சான்றிதழ் பத்தாம் வகுப்பிற்கு இணையானதுதான் என்பதற்கான இணைச்சான்றிதழ் (Equivalence Certificate) ஆகியவற்றை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| 2. | --- | 2. | பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல் |
| 3. | --- | 3. | இடப்பெயர்வு சான்றிதழ் அசல்<br>(வெளி மாநிலத் தேர்வர்கள் மட்டும்) |

மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளை சமர்ப்பிக்கும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களே ஆன் - லைன் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

**IV.<u>மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள்</u>**

மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், **<u>உரிய மருத்துவச் சான்றிதழ் நகல்களையும் கட்டாயமாக இணைத்து</u>** சமர்ப்பிக்க வேண்டும். மேலும், **விண்ணப்பத்தினை ஆன்-லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்பொழுது, தேர்வெழுத கோரும் சலுகைகளையும் பதிவேற்றம் செய்யுமாறு சேவை மையங்களில் தெரிவித்தல் வேண்டும்.**

## V .செய்முறைத் தேர்வில் பங்கேற்கவுள்ள தேர்வர்களுக்கான அறிவுரை (மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள்)

செய்முறைத் தேர்வில் பங்கேற்க வேண்டிய தேர்வர்கள், அரசுத் தேர்வுகள் துறை அறிவிக்கும் நாட்களில் தங்களது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்த பின்பு, அதில் குறிப்பிட்டுள்ள கருத்தியல் தேர்வெழுதவுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை தொடர்பு கொண்டு, செய்முறைத் தேர்வில் பங்கேற்க வேண்டிய நாள் மற்றும் இடம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

## VI. ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கான குறிப்பு

அரசாணை எண் (2டி) 50, பள்ளிக்கல்வித் (ஜிஇ1)துறை, நாள்.09.08.2017-ன்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சிப் பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற்று செய்முறைத் தேர்வில் கட்டாயம் பங்கேற்றிருக்க வேண்டும். மேலும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக 100-க்கு குறைந்த பட்சம் 35 மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். செய்முறைத்தேர்வில் பங்கேற்காமல், தேர்ச்சிக்கான குறைந்த பட்ச மதிப்பெண்(35) பெற்றிருந்தாலும், அத்தேர்வர்கள் தேர்ச்சி பெறாதவர்களே ஆவர்.

ஏற்கனவே எழுத்துத் தேர்வெழுதி, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத காரணத்தால் தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்க வேண்டும். அவ்வகை தேர்வர்கள் மீண்டும் எழுத்துத் தேர்வினை எழுத வேண்டாம்.

ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல், எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 மதிப்பெண்ணுக்கும் குறைவாக பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் தற்போது எழுத்து தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டையும் கட்டாயம் எழுதவேண்டும்.

| வ. எண் | பாடங்கள் | தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | **கருத்தியல் தேர்வு** | **செய்முறைத் தேர்வு** | **அகமதிப்பீடு** | **மொத்தம்** (3+4+5) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | செய்முறைத் தேர்வுள்ள பாடங்கள் | 15<br>**(மொத்த மதிப்பெண்கள்** – 70) | 1. பங்கேற்றிருக்க வேண்டும்<br>2. குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>**(மொத்த மதிப்பெண்கள்** – 20) | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>**(மொத்த மதிப்பெண்கள்** –10) | 35 |
| 2. | மொழிப் பாடங்கள்<br>செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்கள்<br>தொழிற்கல்வி - எழுத்துத் தேர்வு பாடங்கள் | 25<br>**(மொத்த மதிப்பெண்கள்** – 90) | --- | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>**(மொத்த மதிப்பெண்கள்** –10) | 35 |
| 3. | தொழிற்கல்வி - செய்முறைப் பாடங்கள் | ---- | 20<br>**(மொத்த மதிப்பெண்கள்** – 75) | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>**(மொத்த மதிப்பெண்கள்** – 25) | 35 |

## VII. மேல்நிலைத் தேர்வுகள் நடைபெறும் முறை

1. மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வு 600 மதிப்பெண்களுக்கும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வு 600 மதிப்பெண்களுக்கும் நடத்தப்படும்.

2. தேர்வு நேரம் - 3மணி நேரம்.

**(மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளை** www.dge.tn.gov.in **என்ற இணையதளத்தில் காணலாம்.)**

## VIII. நேரடி தனித்தேர்வர்கள் பாடங்களில் தேர்ச்சி பெற குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் குறித்த விளக்கம்

1. ஒவ்வொரு பாடத்திற்கும் 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெறும்.

2. **அரசாணை(நிலை) எண்.243, பள்ளிக் கல்வி(ஜிஇ1)த் துறை, நாள்.17.11.2017-ன் படி, பள்ளி மாணவர்களைப் போன்று, நேரடித் தனித்தேர்வர்களுக்கு அகமதிப்பீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படாது. அதற்குப் பதிலாக, நேரடித் தனித்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள், 100 மதிப்பெண்களுக்கு கணக்கிட்டு வழங்கப்படும். முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி அடைய, நேரடித் தனித்தேர்வர்கள் அனைத்துப் பாடங்களிலும் 100 மதிப்பெண்களுக்கு குறைந்த பட்சம் 35 மதிப்பெண்கள் பெறவேண்டும்.**

## IX. மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் முறை

அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.14.09.2018-ன்படி,

i. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் சமயம், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் என பதிவு செய்து தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) வழங்கப்படும்.

ii. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத தேர்வர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிழ்கள் வழங்கும் சமயம், முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) மட்டும் வழங்கப்படும். அவ்வகையான தேர்வர்களுக்கு அவ்விரு தேர்வுகளிலும் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) மட்டுமே வழங்கப்படும்.

## X. <u>வெளி மாநிலத் தேர்வர்கள்</u>

வெளி மாநிலத்தில் படிப்பை முடித்து மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வுக்கு நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்கும் தேர்வர்கள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ்களுடன் தாங்கள் பயின்ற மாநிலத்திலிருந்து பெற்ற அசல் இடப்பெயர்வு சான்றிதழையும் (Migration Certificate) இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வெளி மாநிலத் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வினை எழுதியவர்கள் நேரடித் தனித்தேர்வராக விண்ணப்பிக்க இயலாது.

<u>தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள் விநியோகம்</u> :-

ஆன்-லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு, தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

<u>தொழிற்பயிசி (ITI) பயின்ற மாணவர்கள்</u>

அரசாணை (நிலை) எண்.34,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (எஸ் 1) துறை, நாள்.30.03.2022-ன்படி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) –க்கான தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கும் அரசுத் தேர்வு சேவை மையங்களின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

<u>முக்கியக்குறிப்பு</u>

**தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.**

ஒம்/-

**இயக்குநர்**

**இடம்: சென்னை – 6**

**நாள்: 26.12..2023.**

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>**

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத்தேர்வு மார்ச் 2024</u>**

**<u>தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்</u>**

மார்ச் 2024-ல் நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தனித்தேர்வர்கள் மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களுக்கு (Govt. Examination service centre) உரிய நாட்களில் ஆவணங்களுடன் நேரில் சென்று விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

- ஏற்கனவே நேரடித் தனித்தேர்வராக மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) தேர்விற்கு விண்ணப்பித்து வருகை புரியாத / தேர்ச்சி பெற்ற / தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவரும், தற்போது மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வெழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

- கடந்த ஆண்டு முதன்முறையாக நேரடி தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது மேல்நிலை முதலாமாண்டு தேர்ச்சி பெறாத பாடங்களை எழுத விண்ணப்பிக்கும்பொழுது, அத்துடன் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

<u>முக்கியக் குறிப்பு:-</u>

- **அரசாணை (1டி) எண்.573, பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை, நாள்.03.10.2017-ன்படி, நேரடித் தனித்தேர்வர்களாக முதன் முறையாக மேல்நிலை பொதுத் தேர்வெழுத விரும்புவோர், மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வெழுதிய பின்னரே மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வு எழுத வேண்டும்.**

**<u>விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள் :</u>**

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centre) **நேரில் சென்று தனித் தேர்வர்கள்**, 27 .12.2023 (**புதன்கிழமை**) **அன்று காலை** 11.00 **மணி முதல்** 10.01.2024 (**புதன்கிழமை**) **அன்று மாலை** 5.00 **மணி வரையிலான நாட்களில்** ( 31 .12.2023 (**ஞாயிற்றுக்கிழமை**), 01.01.2024 (**திங்கட்கிழமை**) **மற்றும்** 07.01.2024

**(ஞாயிற்றுக்கிழமை) நீங்கலாக) வரையிலான நாட்களில் தங்களின்** விண்ணப்பத்தினைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**<u>தத்கல் முறையில் விண்ணப்பிக்க வேண்டிய தேதிகள்</u>** :

மேற்காண் தேதிகளில் விண்ணப்பிக்க தவறியவர்கள் **11.01.2024 (வியாழக்கிழமை) மற்றும் 12.01.2024 (வெள்ளிக்கிழமை) ஆகிய இரு நாட்களில்** காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு நேரில் சென்று ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**<u>தேர்வுக் கால அட்டவணை:</u>**

மார்ச் 2024, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு நடைபெறும் நாட்கள் குறித்த தேர்வுக் கால அட்டவணையினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம்.

**<u>பழைய பாடத்திட்டதில் (Old Syllabus) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர்:</u>**

ஏற்கனவே மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத்தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) பழைய நடைமுறையில் (Old Pattern – 200 marks) / புதிய நடைமுறையில் (New Pattern-100 marks) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், மார்ச் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

**<u>பழைய நடைமுறையில் (Old Pattern) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர்:</u>**

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை பழைய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) எழுதி தேர்ச்சி பெறாதோர், தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். **இத்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையின்படி (ஒவ்வொரு பாடத்திற்கும் 70/90 மதிப்பெண்கள் வீதம்) மட்டுமே தேர்வு நடத்தப்படும்.** புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே தேர்வெழுத வேண்டும்.

**<u>பழைய பாடத்திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்கள்:</u>**

பழைய பாடத்திட்டத்தில் கலைப்பிரிவில் உள்ள கணினி அறிவியல் , வணிகக் கணிதம், இந்தியப் பண்பாடு மற்றும் தொழிற்கல்விப் பிரிவில் உள்ள பாடங்கள் ஆகியவை புதிய பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பாடங்களின் விவரங்களடங்கிய பட்டியலை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். அப்பட்டியலில் உள்ள பாடங்களில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி

தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், அப்பாடங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை மட்டுமே தேர்வு எழுத வேண்டும்.

**தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை ஏற்கெனவே எழுதி, தேர்ச்சி பெறாத தொழிற்கல்வி பாடங்களில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் (Higher Secondary Second Year Vocational Arrear)**

அரசுக் கடித (நிலை) எண்.215/அ.தே/2022, நாள்.07.12.2022-ன்படி, பழைய தொழிற்கல்வி பாடப்பிரிவில் உள்ள கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களில் தேர்வெழுதி தோல்வியுற்ற / வருகைபுரியாத தேர்வர்கள் ஜூன் 2024 வரை கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களிலேயே விண்ணப்பித்து தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் மேற்கண்ட பாடங்களில் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களுக்கு மாற்றாக வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற பாடத்தில் தேர்வெழுத வேண்டும்.

மேலும், கீழ்க்குறிப்பிட்டுள்ள 8 தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயின்று பொதுத் தேர்வில் தோல்வியுற்ற / வருகை புரியாத தேர்வர்கள் ஜூன் 2024 வரை பழைய பாடதிட்டத்தின்படி தேர்வெழுதிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் தோல்வியுறும் தேர்வர்கள் மார்ச் 2025 முதல் மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி தேர்வெழுத வேண்டும்.

இந்நடைமுறை நேரடித் தனித் தேர்வர்களுக்கு பொருந்தாது.

| | |
|---|---|
| 01 | அடிப்படை இயந்திரவியல் ( Basic Mechanical Engineering) |
| 02 | அடிப்படை மின்பொறியியல் ( Basic Electrical Engineering) |
| 03 | அடிப்படை மின்னனு பொறியியல் ( Basic Electronics Engineering) |
| 04 | நெசவியலும் ஆடை வடிவமைப்பும் (Textiles and Dress Designing) |
| 05 | செவிலியம் (Nursing) |
| 06 | வேளாண் அறிவியல் (Agricultural Science) |
| 07 | அலுவலக மேலாண்மையும் செயலியலும் (Office Management and Secretaryship) |
| 08 | கணக்குப் பதிவியலும் தணிக்கையியலும் ( Accountancy and Auditing) |

**விண்ணப்பிக்க தகுதியானவர்கள் மற்றும் தேர்வுக் கட்டணங்கள்:**

| தனித்தேர்வர் வகை | விண்ணப்பிக்கத் தகுதியுள்ளோர் | தேர்வுக் கட்டணம், இதர கட்டணங்கள் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| **HSE SECOND YEAR ARREAR**<br><br>ஏற்கனவே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சிப் பெறாத / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் | ❖ மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வினை ஏற்கனவே பழைய நடைமுறையில் / புதிய நடைமுறையில் எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்கள் அப்பாடங்களை மட்டும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.<br><br>❖ குறிப்பு. பள்ளி மாணவராக பதிவு செய்யப்பட்டு, +2 எழுத்துத் தேர்வு அனைத்திற்கும் வருகை தராதவர்கள், தாம் பயின்ற பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து மேல்நிலைக் கல்வியின்போது போதிய வருகை நாட்கள் பெற்றிருந்தார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணைக்க வேண்டும். | **HSE SECOND YEAR ARREAR**<br><br>தேர்வுக் கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- இதரக் கட்டணம் ரூ.35/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br><br>(உ-ம்)<br>ஒரு பாடம் ரூ.50 + 35 +70 = 155/-<br><br>இரு பாடங்கள் = 205<br>ரூ.100 + 35 + 70 = 205<br><br>தத்கல் கட்டணம்= கூடுதலாக ரூ.1000/- |
| **HSE SECOND YEAR**<br><br>மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுத விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் | ❖ ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற / பெறாத / +1 பொதுத் தேர்விற்கு விண்ணப்பித்து வருகைபுரியாத தனித்தேர்வர்கள் அனைவரும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். | **HSE SECOND YEAR**<br><br>தேர்வுக் கட்டணம் ரூ.150/-<br>இதரக் கட்டணம் ரூ.35/-<br>ஆன் லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/-<br>மொத்தக் கட்டணம் ரூ.255/-<br><br>தத்கல் கட்டணம்= கூடுதலாக ரூ.1000/- |

**+1 பொதுத் தேர்வெழுதிய பின் +2 பள்ளியில் பயிலாமல் இடைநின்ற மாணவர்கள்**

**செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களை பயின்ற பள்ளி மாணவர்கள்**

- முந்தைய கல்வியாண்டுகளில் கீழ்க்காண் 5 பாடத்தொகுப்புகளில் (செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களைக் கொண்ட பாடத் தொகுப்பு) ஏதேனும் ஒரு பாடத்தொகுப்பில் பள்ளியில் பயின்று, **பள்ளி மாணவராக +1 தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற / தேர்ச்சிப் பெறாத தேர்வர்கள், தற்போது பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலாமல் பள்ளியில் இருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்றவர்களாக இருப்பின், அவர்கள் மார்ச் / 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதுவதற்கு +1 அசல் மாற்றுச் சான்றிதழ், இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட +1 மதிப்பெண் பட்டியல் நகல் மற்றும் உரிய தேர்வுக் கட்டணத்துடன் சேவை மையத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.**

| பாடத் தொகுப்பு எண் | பகுதி 3 (Part – III) - பாடங்கள் | | | |
|---|---|---|---|---|
| 2704 | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2705 | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| 2706 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | அறவியல் மற்றும் இந்தியக் கலாச்சாரம் |
| 2707 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்பு மொழி (தமிழ்) |
| 2708 | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் |

**செய்முறைத் தேர்வு கொண்ட பாடங்களை பயின்ற பள்ளி மாணவர்கள்**

- மேல்நிலைக் கல்வி என்பது மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டை உள்ளடக்கிய ஈராண்டு படிப்பு என்பதால், ஒரு பாடத் தொகுப்பில் +1 பயின்று, +1 தேர்வினை எழுதிவிட்டு, வேறொரு பாடத் தொகுப்பில் +2 தேர்வினை எழுத இயலாது.
- செய்முறைத் தேர்வு உள்ள ஒரு பாடத்தொகுப்பில் +1 பயின்று பள்ளி மாணவராக மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய பின்னர், பல்வேறு காரணங்களால், பள்ளிப் படிப்பினை தொடர முடியாத நிலையில் உள்ளவர்கள், அதே பாடத் தொகுப்பிலோ அல்லது வேறு பாடத் தொகுப்பிலோ +2 பொதுத் தேர்வை நேரடி தனித் தேர்வராக எழுத முடியாது.

- ❖ அவ்வகையான தேர்வர்கள் மேற்குறிப்பிட்ட செய்முறைத் தேர்வு இல்லாத பாடத்தொகுப்பில் ஒன்றினை தேர்வு செய்து மீண்டும் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வினை எழுதிய பின்னர் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பித்து தேர்வு எழுத வேண்டும்.

**விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Govt Examination service Centres)**

தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவு செய்திட மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Govt Examination service Centres) உரிய ஆவணங்களுடன் நேரில் சென்று தங்களுடைய விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் விவரங்களை www.dge1.tn.gov.inஎன்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம் :**

**ஆன்-லைனில் விண்ணப்பத்தினைப் பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச்சீட்டு (Registration Slip) வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application number)பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக் கூட அனுமதிச்சீட்டுகளை (Admission Certificate) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியம்.**

**I. தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையத்தில் (Govt.Examination Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

| வ எண் | ஏற்கனவே +2 தேர்வெழுதி தோல்வியுற்றோர் | +1தேர்வெழுதியபின் (600 மதிப்பெண்களுக்கு) முதன்முதலாக +2 தேர்வெழுதுவோர் |
|---|---|---|
| 1. | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும் | உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2. | இதுவரை எழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களின் (Mark Certificate) சுய சான்றொப்பமிட்ட நகல் (Self Attested copy) / மதிப்பெண் பட்டியல்களின் (Statement of Marks) சுய சான்றொப்பமிட்ட நகல் (Self Attested copy) | இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) நகல் அல்லது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) நகல். |
| 3. | தேர்வெழுத தேவையான வருகைப் பதிவு உள்ளது என்பது தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக தேர்வெழுத பதிவு செய்து தேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்). | --- |
| 4. | செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்) | --- |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளை சமர்ப்பிக்கும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களே ஆன் - லைன் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## II. <u>தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை</u> :

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும். பார்வையற்றோர் / வாய்பேசாத மற்றும் காதுகேளாதோர் மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

## III. <u>மாற்றுத் திறனாளிகளுக்குச் சலுகைகள்</u>

மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் நேரம் கோருதல் போன்ற அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளைப் பெற விரும்பினால், தங்களது விண்ணப்பத்துடன் தனியே சலுகை கோரும் கடிதத்தையும், <u>**உரிய மருத்துவச் சான்றிதழ் நகல்களையும் கட்டாயமாக இணைத்து**</u> சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், **விண்ணப்பத்தினை ஆன்-லைன் மூலம் பதிவேற்றம் செய்யும்பொழுது, தேர்வெழுத கோரும் சலுகைகளையும் பதிவேற்றம் செய்யுமாறு சேவை மையங்களில் தெரிவித்தல் வேண்டும்.**

மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கான சலுகைகள் குறித்த அரசாணைகளின் விவரத்தினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று தெரிந்து கொள்ளலாம்.

## IV. செய்முறைத் தேர்வில் பங்கேற்கவுள்ள தேர்வர்களுக்கான முக்கிய குறிப்பு

செய்முறைத் தேர்வில் பங்கேற்க வேண்டிய தேர்வர்கள், அரசுத் தேர்வுகள் துறை அறிவிக்கும் நாட்களில் தங்களது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்த பின்பு, அதில் குறிப்பிட்டுள்ள கருத்தியல் தேர்வெழுதவுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை தொடர்பு கொண்டு, செய்முறைத் தேர்வில் பங்கேற்க வேண்டிய நாள் மற்றும் இடம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

## V. செய்முறை கலந்த பாடங்களில் தேர்ச்சி பெற தனித்தனியே குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் குறித்த விளக்கம்

**பழைய நடைமுறை-1200 மதிப்பெண்கள்**

செய்முறை கலந்த பாடங்களில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், மீண்டும் தேர்வெழுதுவோரைப் பொறுத்தவரை, தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 150-க்கு 30 மதிப்பெண்களும், செய்முறைத் தேர்வில் 50-க்கு 40 மதிப்பெண்களும் பெற வேண்டும்.

எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெறாமல், செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அதே போன்று, எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெற்று செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்கள், எழுத்து தேர்வினை மீண்டும் எழுத வேண்டியதில்லை. செய்முறைத் தேர்வு மட்டும் பங்கேற்றால் போதுமானது.

மேலும், மார்ச் 2001 மேல்நிலைத் தேர்விற்கு முன்னதாக தேர்வெழுதியவர்கள் தாங்கள் செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண் விவரம் குறித்த சான்றினை தாங்கள் படித்த மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இச்சான்றினை படித்த பள்ளியில் பெறமுடியாமற்போனால், கண்டிப்பாக மறுபடியும் செய்முறை தேர்விற்கு வருகைபுரிய வேண்டும்.

**புதிய நடைமுறை-600 மதிப்பெண்கள்**

**மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள்**

**(புதிய நடைமுறை – 600 மதிப்பெண்கள்)**

**தேர்ச்சிக்கான மதிப்பெண் விவரம்**

| வ. எண் | பாடங்கள் | தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | கருத்தியல் தேர்வு | செய்முறைத் தேர்வு | அகமதிப்பீடு | மொத்தம் (3+4+5) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | செய்முறைத் தேர்வுள்ள பாடங்கள் | 15<br>(மொத்த மதிப்பெண்கள் – 70) | 1. பங்கேற்றிருக்க வேண்டும்<br>2. குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>(மொத்த மதிப்பெண்கள் – 20) | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>(மொத்த மதிப்பெண்கள் –10) | 35 |
| 2. | மொழிப்பாடங்கள்<br>செய்முறைத்தேர்வு இல்லாத பாடங்கள்<br>தொழிற்கல்வி - எழுத்துத் தேர்வு பாடங்கள் | 25<br>(மொத்த மதிப்பெண்கள் – 90) | ---- | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>(மொத்த மதிப்பெண்கள் –10) | 35 |
| 3. | தொழிற்கல்வி - செய்முறைப் பாடங்கள் | ---- | 20<br>(மொத்த மதிப்பெண்கள் – 75) | குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை<br>(மொத்த மதிப்பெண்கள் – 25) | 35 |

- அரசாணை எண் (2டி) 50, பள்ளிக்கல்வித் (ஜிஇ1)துறை, நாள்.09.08.2017-ன்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சிப் பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற்று செய்முறைத் தேர்வில் கட்டாயம் பங்கேற்றிருக்க வேண்டும். மேலும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக 100-க்கு குறைந்த பட்சம் 35

மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். **செய்முறைத்தேர்வில் பங்கேற்காமல், தேர்ச்சிக்கான குறைந்த பட்ச மதிப்பெண்(35) பெற்றிருந்தாலும், அத்தேர்வர்கள் தேர்ச்சி பெறாதவர்களே ஆவர்.**

- **ஏற்கனவே எழுத்து தேர்வெழுதி, எழுத்து தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத காரணத்தால் தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்க வேண்டும். அவ்வகை தேர்வர்கள் மீண்டும் எழுத்துத் தேர்வினை எழுத வேண்டாம்.**

- **ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல், எழுத்து தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 மதிப்பெண்ணுக்கும் குறைவாக பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் தற்போது எழுத்து தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டையும் கட்டாயம் எழுதவேண்டும்.**

## VI. ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் புதிய நடைமுறையில் (New Pattern) தேர்வெழுதினால் மதிப்பெண் வழங்கும்முறை

### மொழிப் பாடம் மற்றும் ஆங்கிலப் பாடம்

அரசாணை (நிலை) எண்.118, பள்ளிக் கல்வி (அதே)துறை, நாள்.09.06.2018-ன்படி, மார்ச் 2019 முதல் நடத்தப்படும் மேல்நிலை முதலாமாண்டு (+1) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளில், ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி மொழிப்பாடம் (Language) மற்றும் ஆங்கிலப் (English) பாடங்களில் உள்ள இரண்டு தாள்களை, இரண்டு தேர்வுகளாக நடத்துவதற்கு பதிலாக தாள் I மற்றும் II ஆகியவற்றை உள்ளடக்கி ஒரே தாளாக தேர்வுகள் நடத்தப்படும். பழைய பாடத்திட்டத்தில் மார்ச் 2018-ல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதி மொழிப்பாடம் / ஆங்கிலப்பாடங்களில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கும் இது பொருந்தும்.

பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 100 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட முதல் தாளினையும், 80 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட இரண்டாம் தாளினையும், எழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், 90 மதிப்பெண்களுக்கு ஒரே தாளாக நடத்தப்படும் மொழிப்பாடம் / ஆங்கிலப்பாடத்தேர்வினை எழுதுதல் வேண்டும். அப்பாடத்தேர்வுகளில் அத்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கு பெறும் மதிப்பெண்களை 2 - ஆல் பெருக்கி 180 மதிப்பெண்களுக்கான மதிப்பெண்களாக மாற்றம் செய்து, கற்றல் / கேட்டலுக்கான 20 மதிப்பெண்களையும் சேர்த்து 200 மதிப்பெண்களுக்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**செய்முறைத் தேர்வு இல்லாத (Non Practical) பாடங்கள்**

பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையில் 90 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 90 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 90 ஆல் வகுத்து, 200 ஆல் பெருக்கி $\left[\frac{x}{90} \times 200\right]$ 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

**செய்முறைத் தேர்வு உள்ள (Practical) பாடங்கள்**

பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 70 மதிப்பெண்களுக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்கள் 150க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும். (செய்முறைத் தேர்வு 50 மதிப்பெண்கள்) எழுத்துத்தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 70 ஆல் வகுத்து, 150 ஆல் பெருக்கி $\left[\frac{x}{70} \times 150\right]$ பெறப்படும் மதிப்பெண்ணுடன் செய்முறைத்தேர்வின் மதிப்பெண்ணையும் சேர்த்து 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

## VII. கேட்டல்-பேசுதல் திறன் தேர்வு

**பகுதி I மற்றும் பகுதி II மொழிப்பாடங்களில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு**

- ❖ பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) தேர்வெழுதியவர்கள் ஏற்கனவே மொழிப்பாடம் /
- ❖ ஆங்கிலப் பாடம் / சிறப்பு மொழி (தமிழ்) பாடத்தேர்விற்கான கேட்டல் / பேசுதல் திறன் தேர்வில் பங்கேற்கவில்லையெனில் அத்தேர்வர்களுக்கு மட்டும் தற்போது கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படும். தேர்வர்கள் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வுக்கு தேர்வு மையத் தலைமைக் கண்காணிப்பாளரால் தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட தேதியில் வருகை புரிய வேண்டும். தவறினால் கேட்டல் / பேசுதல் தேர்வுக்கான 20 மதிப்பெண்களை இழக்க நேரிடும். கருத்தியல் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மட்டுமே பதியப்பட்டு மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும்.

- ❖ **ஏற்கனவே கேட்டல் / பேசுதல் திறன் தேர்வில் பங்கேற்றவர்களுக்கு மீண்டும் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு நடத்தப்படாது. அத்தேர்வர்கள் ஏற்கனவே பெற்ற மதிப்பெண்கள் அடுத்து வரும் மொழிப்பாட தேர்வுகளுக்கும் எடுத்துக் கொள்ளப்படும். எந்தச் சூழ்நிலையிலும் இத்தேர்வை மீண்டும் செய்வதற்கு வழிவகை இல்லை.**

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u>** :-

ஆன்-லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு, தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை (Hall Tickets) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

## VIII. <u>மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் முறை</u>

அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.14.09.2018- ன்படி,

i. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிட்டு மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் சமயம், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் என பதிவு செய்து தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) வழங்கப்படும்.

ii. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத தேர்வர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிழ்கள் வழங்கும் சமயம், முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) மட்டும் வழங்கப்படும். அவ்வகையான தேர்வர்களுக்கு அவ்விரு தேர்வுகளிலும் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) மட்டுமே வழங்கப்படும்.

**<u>தொழிற்பயிற்சி (ITI) பயின்ற மாணவர்கள்</u>**

அரசாணை (நிலை) எண்.. 34, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (எஸ் 1) துறை, நாள்.30.03.2022-ன் படி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) -க்கான தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் தேர்வுகளுக்கும் அரசுத் தேர்வு சேவை மையங்களின் வாயிலாக மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய குறிப்பு:

**தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/-**

**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**இடம்: சென்னை – 6**

**நாள்: 26.12.2023.**

| HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS | | | |
|---|---|---|---|
| Sl No. | OLD SYLLABUS | NEW SYLLABUS | |
| | SUBJECT NAME | SUB CODE | SUBJECT NAME |
| 1 | INDIAN CULTURE | 565 | ETHICS AND INDIAN CULTURE |
| 2 | BUSINESS MATHS | 577 | BUSINESS MATHEMATICS AND STATISTICS |
| 3 | COMPUTER SCIENCE (SCIENCE GROUP) | 519 | COMPUTER SCIENCE |
| 4 | COMPUTER SCIENCE (ARTS GROUP) | 579 | COMPUTER APPLICATIONS |
| 5 | GENERAL MACHINIST - THEORY | 701 | BASIC MECHANICAL ENGINEERING - THEORY |
| 6 | GENERAL MACHINIST - PRACTICAL - I | 705 | BASIC MECHANICAL ENGINEERING - PRACTICAL |
| 7 | GENERAL MACHINIST - PRACTICAL - II | | |
| 8 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - THEORY I | 707 | BASIC ELECTRICAL ENGINEERING - THEORY |
| 9 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - PRACTICAL - I | 711 | BASIC ELECTRICAL ENGINEERING - PRACTICAL |
| 10 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - PRACTICAL - II | | |
| 11 | ELECTRONIC EQUIPMENTS - THEORY | 713 | BASIC ELECTRONICS ENGINEERING - THEORY |
| 12 | ELECTRONIC EQUIPMENTS - PRACTICAL I | 715 | BASIC ELECTRONICS ENGINEERING - PRACTICAL |
| 13 | ELECTRONIC EQUIPMENTS - PRACTICAL II | | |

| HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS | | | |
|---|---|---|---|
| SI No. | OLD SYLLABUS | NEW SYLLABUS | |
| 14 | DRAUGHTSMAN CIVIL - THEORY | 719 | BASIC CIVIL ENGINEERING - THEORY |
| 15 | DRAUGHTSMAN CIVIL - PRACTICAL I | 721 | BASIC CIVIL ENGINEERING - PRACTICAL |
| 16 | DRAUGHTSMAN CIVIL - PRACTICAL II | | |
| 17 | AUTO MECHANIC - THEORY | 725 | BASIC AUTOMOBILE ENGINEERING - THEORY |
| 18 | AUTO MECHANIC - PRACTICAL I | 727 | BASIC AUTOMOBILE ENGINEERING - PRACTICAL |
| 19 | AUTO MECHANIC - PRACTICAL II | | |
| 20 | TEXTILE TECHNOLOGY - PRACTICAL I | 733 | TEXTILE TECHNOLOGY PRACTICAL |
| 21 | TEXTILE TECHNOLOGY - PRACTICAL II | | |
| 22 | NURSING(Vocational) - THEORY | 751 | NURSING(Vocational) - THEORY |
| 23 | NURSING(Vocational) - PRACTICAL I | 753 | NURSING(Vocational) PRACTICAL |
| 24 | NURSING(Vocational) - PRACTICAL II | | |
| 25 | TEXTILES AND DRESS DESIGNING - PRACTICAL I | 763 | TEXTILES AND DRESS DESIGNING PRACTICAL |
| 26 | TEXTILES AND DRESS DESIGNING - PRACTICAL II | | |
| 27 | FOOD MANAGEMENT AND CHILD CARE - THEORY | 767 | FOOD SERVICE MANAGEMENT - THEORY |
| 28 | FOOD MANAGEMENT AND CHILD CARE - PRACTICAL I | 769 | FOOD SERVICE MANAGEMENT - PRACTICAL |
| 29 | FOOD MANAGEMENT AND CHILD CARE - PRACTICAL II | | |

| HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS | | | |
|---|---|---|---|
| SI No. | OLD SYLLABUS | NEW SYLLABUS | |
| 30 | AGRICULTURAL PRACTICES - THEORY | 781 | AGRICULTURAL SCIENCE- THEORY |
| 31 | AGRICULTURAL PRACTICES - PRACTICAL I | 783 | AGRICULTURAL SCIENCE- PRACTICAL |
| 32 | AGRICULTURAL PRACTICES - PRACTICAL II | | |
| 33 | OFFICE MANAGEMENT - THEORY | 787 | OFFICE MANAGEMENT AND SECRETARYSHIP- THEORY |
| 34 | TYPEWRITING - PRACTICAL | 789 | TYPOGRAPHY AND COMPUTER APPLICATIONS - PRACTICAL |
| 35 | ACCOUNTANCY & AUDITING - THEORY | 557 | ACCOUNTANCY (GENERAL) - THEORY |
| 36 | ACCOUNTANCY & AUDITING - PRACTICAL I | 799 | AUDITING PRACTICAL |
| 37 | ACCOUNTANCY & AUDITING - PRACTICAL II | | |

Sd./-
DIRECTOR

## HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS

| SI No. | OLD SYLLABUS | | NEW SYLLABUS | |
|---|---|---|---|---|
| | SUB COD | SUBJECT NAME | SUB CODE | SUBJECT NAME |
| 1 | 165 | ETHICS | 165 | ETHICS AND INDIAN CULTURE |
| 2 | 177 | BUSINESS MATHS | 177 | BUSINESS MATHEMATICS AND STATISTICS |
| 3 | 119 | COMPUTER SCIENCE (SCIENCE GROUP) | 119 | COMPUTER SCIENCE |
| 4 | 119 | COMPUTER SCIENCE (ARTS GROUP) | 179 | COMPUTER APPLICATIONS |
| 5 | 301 | GENERAL MACHINIST - THEORY I | 301 | BASIC MECHANICAL ENGINEERING - THEORY |
| 6 | 303 | GENERAL MACHINIST - THEORY II | | |
| 7 | 305 | GENERAL MACHINIST - PRACTICAL | 305 | BASIC MECHANICAL ENGINEERING - PRACTICAL |
| 8 | 307 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - THEORY I | 307 | BASIC ELECTRICAL ENGINEERING - THEORY |
| 9 | 309 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - THEORY II | | |
| 10 | 311 | ELECTRICAL MACHINES AND APPLIANCES - PRACTICAL | 311 | BASIC ELECTRICAL ENGINEERING - PRACTICAL |
| 11 | 313 | ELECTRONIC EQUIPMENTS - THEORY | 313 | BASIC ELECTRONICS ENGINEERING - THEORY |
| 12 | 315 | ELECTRONIC EQUIPMENTS - PRACTICAL I | 315 | BASIC ELECTRONICS ENGINEERING - PRACTICAL |
| 13 | 317 | ELECTRONIC EQUIPMENTS - PRACTICAL II | | |

## HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS

| Sl No. | OLD SYLLABUS | | NEW SYLLABUS | |
|---|---|---|---|---|
| | SUB COD | SUBJECT NAME | SUB CODE | SUBJECT NAME |
| 14 | 319 | DRAUGHTSMAN CIVIL - THEORY | 319 | BASIC CIVIL ENGINEERING - THEORY |
| 15 | 321 | DRAUGHTSMAN CIVIL - PRACTICAL I | 321 | BASIC CIVIL ENGINEERING - PRACTICAL |
| 16 | 323 | DRAUGHTSMAN CIVIL - PRACTICAL II | | |
| 17 | 325 | AUTO MECHANIC - THEORY | 325 | BASIC AUTOMOBILE ENGINEERING - THEORY |
| 18 | 327 | AUTO MECHANIC - PRACTICAL I | 327 | BASIC AUTOMOBILE ENGINEERING - PRACTICAL |
| 19 | 329 | AUTO MECHANIC - PRACTICAL II | | |
| 20 | 333 | TEXTILE TECHNOLOGY - PRACTICAL I | 333 | TEXTILE TECHNOLOGY PRACTICAL |
| 21 | 335 | TEXTILE TECHNOLOGY - PRACTICAL II | | |
| 22 | 351 | NURSING(Vocational) - THEORY | 351 | NURSING(Vocational) - THEORY |
| 23 | 353 | NURSING(Vocational) - PRACTICAL I | 353 | NURSING(Vocational) - PRACTICAL |
| 24 | 355 | NURSING(Vocational) - PRACTICAL II | | |
| 25 | 363 | TEXTILES AND DRESS DESIGNING - PRACTICAL I | 363 | TEXTILES AND DRESS DESIGNING PRACTICAL |
| 26 | 365 | TEXTILES AND DRESS DESIGNING - PRACTICAL II | | |
| 27 | 367 | FOOD MANAGEMENT AND CHILD CARE - THEORY | 367 | FOOD SERVICE MANAGEMENT - THEORY |

**HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION - EQUIVALENT SUBJECTS**

| SI No. | OLD SYLLABUS | | NEW SYLLABUS | |
|---|---|---|---|---|
| | SUB COD | SUBJECT NAME | SUB CODE | SUBJECT NAME |
| 28 | 369 | FOOD MANAGEMENT AND CHILD CARE - PRACTICAL I | 369 | FOOD SERVICE MANAGEMENT - PRACTICAL |
| 29 | 371 | FOOD MANAGEMENT AND CHILD CARE - PRACTICAL II | | |
| 30 | 381 | AGRICULTURAL PRACTICES - THEORY | 381 | AGRICULTURAL SCIENCE- THEORY |
| 31 | 383 | AGRICULTURAL PRACTICES - PRACTICAL I | 383 | AGRICULTURAL SCIENCE- PRACTICAL |
| 32 | 385 | AGRICULTURAL PRACTICES - PRACTICAL II | | |
| 33 | 391 | MANAGEMENT PRINCIPLES - THEORY | 387 | OFFICE MANAGEMENT AND SECRETARYSHIP- THEORY |
| 34 | 393 | TYPEWRITING - PRACTICAL | 389 | TYPOGRAPHY AND COMPUTER APPLICATIONS - PRACTICAL |
| 35 | 395 | VOCATIONAL ACCOUNTANCY - THEORY | 157 | ACCOUNTANCY (GENERAL) - THEORY |
| 36 | 397 | MANAGEMENT PRINCIPLES &TECHNIQUES - THEORY | 387 | OFFICE MANAGEMENT AND SECRETARYSHIP- THEORY |

sd/-

**DIRECTOR**